Subject Initials ________

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

இந்த கேள்வித்தாள், நேர்காணலுக்கு வழிகாட்டுவதற்கான ஒரு அடிப்படை கேள்வித் தொகுப்பு அடங்கியதாகும். தயவு செய்து எல்லா கேள்விகளையும் கேட்கவும். ஆய்வுக்கு உட்படுபவரின் மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டைத் (CDR) தீர்மானிக்கத் தேவைப்படும் கூடுதல் கேள்விகளைக் கேட்கவும். கூடுதல் கேள்விகளிலிருந்து தகவலை குறித்துக் கொள்ளவும்.

**தகவலாளருக்கான ஞாபகம் தொடர்பான கேள்விகள்:**

1. அவரது ஞாபக சக்தி அல்லது சிந்திக்கும் திறனில் அவருக்குப் பிரச்சினை உள்ளதா? ☐ ஆம் ☐ இல்லை

1a. ஆம் எனில், இது தொடர்ந்து இருக்கும் பிரச்சினையா (தொடர்ந்து இல்லை என்பதற்கு எதிர்பதம்)? ☐ ஆம் ☐ இல்லை

2. சமீபகால நிகழ்ச்சிகளை அவரால் ஞாபகத்திற்குக் கொண்டுவர முடிகிறதா? ☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக

3. பொருட்களின் (கடைக்கு சென்று பொருட்களை வாங்குதல்) ஒரு சிறிய பட்டியலை அவரால் ஞாபகம் வைத்துக் கொள்ள முடிகிறதா? ☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக

4. ஞாபக சக்தியில் கடந்த வருடம் ஓரளவு சரிவு ஏற்பட்டிருக்கிறதா? ☐ ஆம் ☐ இல்லை

5. சில ஆண்டுகளுக்கு முன்பே அவருடைய தினசரி வாழ்க்கையின் செயல்பாடுகளில் (அல்லது ஓய்வு பெறுவதற்கு முந்தைய செயல்பாடுகளில்) குறுக்கீடு செய்யும் அளவுக்கு அவருடைய ஞாபக சக்தி பாதிக்கப்பட்டுள்ளதா? (குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் கருத்துப்படி) ☐ ஆம் ☐ இல்லை

6. ஒரு பிரதான சம்பவம் (உதா. பயணம், சமூகக் கூட்டம், குடும்பத்தில் திருமணம்) நடந்த ஒருசில வாரங்களுக்குள்ளாகவே அதை அவர் முற்றிலும் மறந்துவிடுகிறாரா ? ☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக

7. ஒரு பிரதான சம்பவத்தின் முக்கியமான விவரங்களை மறந்துவிடுகிறாரா? ☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக

8. அவர் தொலைவான கடந்த காலத்திய முக்கிய தகவலை முற்றிலும் மறந்துவிடுகிறாரா? (உதா. பிறந்தநாள், திருமண நாள், வேலை செய்யும் இடம்) ☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக

9. அவர் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய, சமீபத்தில் அவருடைய வாழ்க்கையில் நடந்த ஏதேனும் சில சம்பவங்கள் பற்றி எனக்கு சொல்லுங்கள். (ஆய்வுக்கு உட்படுபவரின் பதில்களுடன் பிறகு ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக, சம்பவம் நடந்த இடம், நடந்த நேரம், பங்கேற்பாளர்கள், சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது, எப்போது முடிந்தது மற்றும் ஆய்வுக்கு உட்படுபவர் அல்லது பிற பங்கேற்பாளர்கள் அங்கே எப்படிப் போனார்கள் போன்ற எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்ளவும்).

   1 வாரத்திற்குள்: ____________________

   ____________________

   ____________________

   1 மாதத்திற்குள்: ____________________

   ____________________

   ____________________

10. அவர் எப்போது பிறந்தார்? ____________________

11. அவர் எங்கே பிறந்தார்? ____________________

12. அவர் கடைசியாகப் படித்த பள்ளி எது? ____________________
    பெயர் ____________________
    இடம் ____________________
    வகுப்பு ____________________

13. அவருடைய பிரதான தொழில்/வேலை என்ன (அல்லது அவர் வேலை செய்யவில்லை என்றால் அவரது வாழ்க்கைத் துணைவரின் வேலை) ? ____________________

14. அவரது கடைசியாகப் பார்த்த பிரதான வேலை எது (அல்லது அவர் வேலை செய்யவில்லை என்றால் அவரது வாழ்க்கைத் துணைவரின் வேலை) ? ____________________

15. அவர் (அல்லது வாழ்க்கைத் துணைவர்) எப்போது, ஏன் ஓய்வு பெற்றார்? ____________________

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

**காலம் மற்றும் இடத்தைத் தீர்மானிக்கும் திறமை பற்றிய தகவலாளருக்கான கேள்விகள்:**

கீழ்க்காண்பவற்றை எவ்வளவு நேரம் அவர் சரியாகத் தெரிந்து வைத்திருந்தார்:

1. தேதி?

☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

2. மாதம்?

☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

3. வருடம்?

☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

4. கிழமை?

☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

5. நேரத்தைத் தொடர்பு படுத்துவதில் அவருக்குப் பிரச்சினை இருக்கிறதா (ஒன்றையொன்று தொடர்புடைய சம்பவங்கள் நடந்தபோது)?

☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

6. பழக்க்மான தெருக்களைக் கண்டுபிடித்து அவரால் போகமுடியுமா?

☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

7. தனது வீட்டின் அண்டைப் பகுதிக்கு வெளியில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எவ்வளவு அடிக்கடி அவரால் போக முடிகிறது?

☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

8. கட்டிடத்திற்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எவ்வளவு அடிக்கடி அவரால் வழிபார்த்து செல்ல முடிகிறது?

☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

**தகவலாளருக்கான தீர்மானித்தல் மற்றும் பிரச்சினை தீர்த்தல் கேள்விகள்:**

1. பொதுவாக, இன்றைய காலகட்டத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவருக்குள்ள திறமையை மதிப்பிட்டால், அதை எவ்வாறு கருதுவீர்கள்:

   ☐ எப்போதும் போல சிறப்பாக

   ☐ நன்றாக, ஆனால் முன்பு போல் இல்லை

   ☐ பரவாயில்லை

   ☐ மோசம்

   ☐ சற்று கூட திறமை இல்லை

2. ஓரளவு பணத்தைக் கையாள்வதில் அவர் திறமையை மதிப்பிடவும் (உதா. சில்லறை மாற்றுவது, கொஞ்சம் டிப்ஸ் கொடுப்பது):

   ☐ இழப்பு இல்லை

   ☐ ஓரளவு இழப்பு

   ☐ கடும் இழப்பு

3. சிக்கலான நிதி அல்லது வியாபார கொடுக்கல் வாங்கல்களை அவர் கையாளும் விதத்தை மதிப்பிடுக (உதா. வீட்டு செலவினங்களைக் கையாளுதல்):

   ☐ இழப்பு இல்லை

   ☐ ஓரளவு இழப்பு

   ☐ கடும் இழப்பு

4. வீடு சம்பந்தப்பட்ட ஒரு அவசரப் பிரச்சினையை அவரால் கையாள முடியுமா (உதா. குழாய் ஒலுகுதல், சிறிய அளவில் தீ)?

   ☐ முன்பைப் போலவே நன்றாக

   ☐ சிந்திப்பதில் பிரச்சினை என்பதால் முன்பை விட மோசம்

   ☐ முன்பை விட மோசம், மற்றொரு காரணம் (ஏன்) ______________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

5. சூழ்நிலைகளையும் விளக்கங்களையும் அவரால் புரிந்து கொள்ள முடியுமா?

   ☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

6. சமூக சூழ்நிலைகளிலும் மற்றவர்களுடனான தொடர்பின் போதும் பொருத்தமாக நடந்து கொள்கிறாரா* [அதாவது, வழக்கமான (நோய்க்கு முந்தைய) முறையில்]?

   ☐ பெரும்பாலான நேரம் ☐ சில நேரம் ☐ அரிதாக ☐ தெரியாது

---

* இந்தக் கேள்வி நடத்தையை மதிப்பிடுகிறது, தோற்றத்தை அல்ல.

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

**தகவலாளருக்கான சமுதாய ஈடுபாடுகள் குறித்த கேள்விகள்:**

**வேலை சம்பந்தமாக**

1. ஆய்வுக்கு உட்படுபவர் இப்போதும் வேலையில் இருக்கிறாரா?
பொருந்தாது என்றால், கேள்வி 4 க்குச் செல்லவும்.
ஆம் என்றால், கேள்வி 3 க்குச் செல்லவும்.
இல்லை என்றால், கேள்வி 2 க்குச் செல்லவும். ☐ ஆம் ☐ இல்லை ☐ பொருந்தாது

2. ஆய்வுக்கு உட்படுபவர் ஒய்வு பெறவேண்டும் என்ற முடிவுக்கு அவருடைய ஞாபக சக்தி அல்லது சிந்தனை தொடர்பான பிரச்சினை காரணமாக இருந்ததா? (அடுத்து கேள்வி 4) ☐ ஆம் ☐ இல்லை ☐ பொருந்தாது

3. ஞாபக சக்தி அல்லது சிந்தனை தொடர்பான பிரச்சினை காரணமாக ஆய்வுக்கு உட்படுபவருக்கு கூடுதலன் தொந்தரவு இருக்கிறதா?
☐ அரிதாக (அ) ஒருபோதுமில்லை ☐ சில நேரம் ☐ பெரும்பாலான நேரம் ☐ தெரியாது

**சமூக வாழ்வு**

4. அவர் எப்போதாவது கார் ஓட்டியிருக்கிறாரா? ☐ ஆம் ☐ இல்லை

ஆய்வுக்கு உட்படுபவர் இப்போதும் கார் ஓட்டுகிறாரா? ☐ ஆம் ☐ இல்லை

இல்லை என்றால், அதற்கு ஞாபக சக்தி அல்லது சிந்தனை தொடர்பான பிரச்சினை காரணமா? ☐ ஆம் ☐ இல்லை

5. அவர் இன்னமும் கார் ஓட்டிவருகிறாரெனில், சிந்தனைக் கோளாறு காரணத்தால் அவருக்கு ஏதேனும் பிரச்சினைகளோ அல்லது அபாயங்களோ உள்ளதா? ☐ ஆம் ☐ இல்லை

*6. தேவைக்கு அவரால் தன்னந்தனியாகவே கடைக்கு சென்றுவர முடிகிறதா?

| | | | |
|---|---|---|---|
| ☐ அரிதாக (அ) ஒருபோதுமில்லை (கடைக்குப் போக பிறர் துணை தேவை) | ☐ சில நேரம் (சில பொருட்களுக்காக மட்டும் ஷாப்பிங் செய்கிறார்; ஒரு பொருளை ஒரே நேரத்தில் பலமுறை வாங்குதல் அல்லது அவசியமான பொருட்களை வாங்க மறத்தல்) | ☐ பெரும்பாலான நேரம் | ☐ தெரியாது |

7. வீட்டுக்கு வெளியே உள்ள செயல்பாடுகளை அவரால் தன்னந்தனியாகவே செய்ய முடிகிறதா?

| | | | |
|---|---|---|---|
| ☐ அரிதாக (அ) ஒருபோதுமில்லை (பொதுவாக உதவியின்றி அவராகவே செயல்பாடுகளை செய்யமுடியாது) | ☐ சில நேரம் (ஓரளவுக்கு மற்றும்/அல்லது வழக்கமான செயல்பாடுகள். உதா. மதம் தொடர்பான செயல்பாடுகளில் பெயரளவிற்கு பங்கேற்றல் அல்லது அழகு நிலையம் செல்வது) | ☐ பெரும்பாலான நேரம் (அர்த்தமுள்ள பங்கேற்பு, உதா. வாக்களித்தல்) | ☐ தெரியாது |

8. வீட்டுக்கு வெளியில் நடக்கும் சமூக நிகழ்ச்சிகளுக்கு அழைத்து செல்லப்படுகிறாரா? ☐ ஆம் ☐ இல்லை

இல்லையெனில், ஏன் இல்லை? ______________________________

9. ஆய்வுக்கு உட்படுபவரின் நடத்தையை சாதாரணமாகப் பார்க்கும் ஒருவர் அவர் நோயுற்றிருக்கிறார் என்று நினைப்பாரா? ☐ ஆம் ☐ இல்லை

10. சிகிச்சை இல்லத்தில் இருக்கும்போது, சமூக நிகழ்ச்சிகளில் நல்ல முறையில் கலந்து கொள்கிறாரா (சிந்தனை)? ☐ ஆம் ☐ இல்லை

**முக்கியம்:**
சமுதாய நிகழ்ச்சிகளில் ஆய்வுக்கு உட்படுபவர் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறார் என்பதை மதிப்பிடப் போதுமான தகவல்கள் உள்ளனவா?
**<u>இல்லையெனில், தயவு செய்து மேலும் விசாரிக்கவும்.</u>**

<u>சமுதாய ஈடுபாடுகள்</u>: மதச்சார்பான செயல்பாடுகள், நண்பர்கள் அல்லது குடும்பங்களுடன் வெளியில் செல்வது, அரசியல் செயல்பாடுகள், தொழில் ரீதியான சங்கங்களில் சேர்ந்து செயல்படுவது, பிற தொழில்முறை குழுமங்களில் பங்கெடுப்பது, சமூக அமைப்புகள், சேவை அமைப்புகள், கல்வி அமைப்புகளில் சேர்ந்து செயல்படுவது

---

***இந்த விவகாரங்களில் ஆய்வுக்கு உட்படுபவரின் பங்கெடுப்பு நிலையை தெளிவு படுத்திக் கொள்ள, தேவையெனில் தயவு செய்து குறிப்புகளைச் சேர்க்கவும்.**

Subject Initials _________

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

**தகவலாளரின் வீட்டு வேலைகள் மற்றும் பொழுதுபோக்கு குறித்த கேள்விகள்**

1a. வீட்டு வேலைகளைச் செய்யும் அவருடைய திறனில் என்ன மாற்றங்கள் நடந்திருக்கின்றன? ________

1b. அவரால் எதையெல்லாம் இப்போதும் நன்றாகச் செய்ய முடிகிறது? ________

2a. அவர் பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதற்கான அவருடைய திறனில் என்ன மாற்றங்கள் நடந்திருக்கின்றன? ________

2b. அவரால் எதையெல்லாம் இப்போதும் நன்றாகச் செய்ய முடிகிறது? ________

3. சிகிச்சை இல்லத்தில் இருக்கும்போது, அவரால் எவற்றை முன்பு போல சரியாகச் செய்ய முடியவில்லை (வீட்டு வேலையும் பொழுதுபோக்கும்)? ________

**அன்றாட நடவடிக்கைகள் (The Dementia Scale of Blessed)**

| | இழப்பு இல்லை | | கடும் இழப்பு |
|---|---|---|---|
| 4. வீட்டு வேலைகளை செய்யும் திறன் | 0 | 0.5 | 1 |

தயவு செய்து விவரிக்கவும்: ________

5. எந்த அளவிற்கு அவரால் வீட்டு வேலைகளை செய்யமுடிகிறது:
(ஒன்றைத் தேர்வுசெய்க. தகவலாளரை நேரடியாகக் கேட்க வேண்டியதில்லை).

- ☐ உருப்படியான செயல்பாடு ஏதுமில்லை.
(படுக்கையை சரிசெய்தல் போன்ற சின்னச்சின்ன வேலைகளை செய்கிறார், அதுவும் பிறருடைய மிகுதியான கண்காணிப்பில்)
- ☐ சில வேலைகளை மட்டும் செய்ய முடிகிறது.
(ஓரளவு கண்காணிப்பில், ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவு சுத்தத்துடன் பாத்திரங்களைக் கழுவுகிறார், மேஜையை சரி செய்கிறார்)
- ☐ சில வேலைகளை தன்னந்தனியாக செய்ய முடிகிறது.
(வாக்கூம் கிளீனர் போன்றவற்றை இயக்க முடிகிறது, எளிய சாப்பாட்டைத் தயாரித்துக் கொள்ள முடிகிறது)
- ☐ வழக்கமான வேலைகளை, ஆனால் வழக்கமான அளவைவிடக் குறைவாக செய்ய முடிகிறது.
- ☐ வழக்கமான வேலைகளை வழக்கம் போல செய்ய முடிகிறது.

**முக்கியம்:**
வீட்டு வேலைகள் செய்தல் மற்றும் பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதில் ஆய்வுக்கு உட்படுபவர் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறார் என்பதை மதிப்பிடப் போதுமான தகவல்கள் உள்ளனவா?
**இல்லையெனில், தயவு செய்து மேலும் விசாரிக்கவும்.**

வீட்டு வேலைகள்: சமைத்தல், துணிதுவைத்தல், துப்புரவு செய்தல், மளிகை சாமான்கள் வாங்குதல், குப்பையை அகற்றுதல், தோட்ட வேலை, சாதாரண பராமரிப்பு வேலை மற்றும் அடிப்படையான வீட்டுப் பழுதுபார்ப்பு போன்றவை.

பொழுதுபோக்குகள்: தையல், ஓவியம் வரைதல், கைவினைப் பொருட்கள் செய்தல், படித்தல், மகிழச்செய்தல், புகைப்படக்கலை, தோட்டக்கலை, நாடகத்திற்கு/சினிமாவிற்கு அல்லது இசை நிகழ்ச்சிக்கு செல்லுதல், மரவேலை, விளையாட்டுகளில் பங்கேற்றல் போன்றவை.



CDR – Malaysia/Tamil. Final version. 01 Sep 06 – Mapi Research Institute.
f:\institut\cultadap\project\2925\etude2925\final-versions\cdr\cdrmatq.doc-01/09/2006

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

**தகவலாளருக்கான சுய பராமரிப்பு பற்றிய கேள்விகள்:**

* கீழ்க்காண்பவற்றில் அவரது மனத்திறன் பற்றிய உங்களது மதிப்பீடு என்ன:

| | உதவியின்றி | எப்போதாவது பொத்தன்களை இடம் மாற்றி வைத்துவிடுதல், போன்றவை | பொதுவாக மறந்துவிடும் ஆடைகளைத் தவறாக வரிசைப் படுத்துதல் | ஆடை அணிய இயலாமை |
|---|---|---|---|---|
| A. ஆடை அணிதல் (The Dementia Scale of Blessed) | 0 | 1 | 2 | 3 |

| | உதவியின்றி | தூண்ட வேண்டியுள்ளது | சில சமயம் உதவி தேவை | எப்போதும்/ கிட்டத்தட்ட எப்போதும் உதவி தேவை |
|---|---|---|---|---|
| B. குளித்தல், அலங்கரித்து கொள்ளுதல் | 0 | 1 | 2 | 3 |

| | சுத்தமாக; சரியான பாத்திரங்கள் | அசுத்தமாக; கரண்டி | எளிய திட உணவு | முழுவதும் ஊட்டப்பட வேண்டும் |
|---|---|---|---|---|
| C. சாப்பிடுதல் | 0 | 1 | 2 | 3 |

| | சாதாரணமாக முழுமையான கட்டுப்பாடு | எப்போதாவது படுக்கையில் சிறுநீர் கழித்தல் | அடிக்கடி படுக்கையில் சிறுநீர் கழித்தல் | சிறுநீர் மற்றும் மலத்தின் மீது கட்டுப்பாடு இல்லை |
|---|---|---|---|---|
| D. சிறுநீர் மற்றும் மலத்தின் மீது கட்டுப்பாடு (The Dementia Scale of Blessed) | 0 | 1 | 2 | 3 |

* தூண்டப்பட வேண்டிய நிலையில் இல்லையென்றாலும், ஆய்வுக்கு உட்படுபவரின் சுய பராமரிப்பு முந்தைய நிலையை விட பாதிக்கப்பட்டிருப்பின், மதிப்பெண் கட்டம் 1 ஐ தேர்வு செய்யலாம்.

Subject Initials _________

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

**ஆய்வுக்கு உட்படுபவருக்கான ஞாபகம் பற்றிய கேள்விகள்:**

1. உங்களுக்கு ஞாபகம் அல்லது சிந்திப்பதில் பிரச்சினை இருக்கிறதா? ☐ ஆம் ☐ இல்லை

2. சற்று நேரத்துக்கு முன்புதான் உங்கள் (வாழ்க்கைத் துணைவர், பிறர்) உங்களுடைய சமீபத்திய அனுபவங்கள் சிலவற்றைப் பற்றி என்னிடம் கூறினார்கள். அவை பற்றி என்னிடம் தாங்கள் ஏதேனும் கூறமுடியுமா? (சம்பவம் நடந்த இடம், நடந்த நாள், பங்கேற்பாளர்கள், எவ்வளவு நேரம் நடந்தது, எப்போது முடிந்தது, ஆய்வுக்கு உட்படுபவரும் பிற பங்கேற்பாளர்களும் அங்கே எப்படி போனார்கள் போன்ற விவரங்களைப் பெற தூண்டுங்கள்).

1 வாரத்திற்குள்

1.0 – பெருமளவில் சரி ________________

0.5 ________________

0.0 – பெருமளவில் சரியில்லை ________________

1 மாதத்திற்குள்

1.0 – பெருமளவில் சரி ________________

0.5 ________________

0.0 – பெருமளவில் சரியில்லை ________________

3. நான் உங்களிடம் ஒரு பெயரையும் முகவரியையும் சொல்லுவேன். அதை சில நிமிடங்களுக்கு நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நான் அந்தப் பெயரையும் முகவரியையும் சொன்னவுடன் நீங்கள் திருப்பிச் சொல்லுங்கள்: (அவர் சரியாக சொல்லும்வரை அல்லது அதிகபட்சம் மூன்று தடவை வரை திரும்பத் திரும்ப சொல்லுங்கள்).

| அம்சங்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| | முத்து | பாண்டி, | 42 | ஜாலான் கூச்சிங், | கோலாலம்பூர் |
| | முத்து | பாண்டி, | 42 | ஜாலான் கூச்சிங், | கோலாலம்பூர் |
| | முத்து | பாண்டி, | 42 | ஜாலான் கூச்சிங், | கோலாலம்பூர் |

(ஒவ்வொரு முயற்சியிலும் சரியாக திருப்பிச் சொன்னவற்றை அடிக்கோடிடுக).

4. நீங்கள் பிறந்த தேதி என்ன? ________________

5. நீங்கள் எங்கே பிறந்தீர்கள்? ________________

6. நீங்கள் கடைசியாகப் படித்த பள்ளி எது?
   பெயர் ________________
   இடம் ________________ வகுப்பு ________________

7. உங்கள் பிரதான தொழில்/வேலை எது (நீங்கள் வேலையில் இல்லையென்றால் உங்கள் வாழ்க்கைத் துணைவரின் வேலை)? ________________

8. நீங்கள் கடைசியாக இருந்த பிரதான வேலை எது (நீங்கள் வேலையில் இல்லையென்றால் உங்கள் வாழ்க்கைத் துணைவரின் வேலை)? ________________

9. நீங்கள் (அல்லது வாழ்க்கைத் துணைவர்) ஓய்வு பெற்றது எப்போது மற்றும் ஏன்?

10. நான் ஞாபகம் வைத்துக் கொள்ளுமாறு சொன்ன பெயரையும் முகவரியையும் திருப்பிச் சொல்லுங்கள்:

| அம்சங்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| | முத்து | பாண்டி, | 42 | ஜாலான் கூச்சிங், | கோலாலம்பூர் |

**(சரியாக திருப்பிச் சொன்ன அம்சங்களை அடிக்கோடிடுக).**

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

**காலம் மற்றும் இடத்தைத் தீர்மானிக்கும் திறமை பற்றிய ஆய்வுக்கு உட்படுபவருக்கான கேள்விகள்:**

ஒவ்வொரு கேள்விக்கும் ஆய்வுக்கு உட்படுபவர் கூறும் பதிலை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே எழுதவும்

1. இன்றைய தேதி என்ன? ☐ சரி ☐ சரியல்ல

   ________________________________________

2. இன்று என்ன கிழமை? ☐ சரி ☐ சரியல்ல

   ________________________________________

3. இது என்ன மாதம்? ☐ சரி ☐ சரியல்ல

   ________________________________________

4. இது என்ன வருடம்? ☐ சரி ☐ சரியல்ல

   ________________________________________

5. இந்த இடத்தின் பெயர் என்ன? ☐ சரி ☐ சரியல்ல

   ________________________________________

6. நாம் இருக்கும் நகரத்தின் அல்லது மாநகரத்தின் பெயர் என்ன? ☐ சரி ☐ சரியல்ல

   ________________________________________

7. இப்போது நேரம் என்ன? ☐ சரி ☐ சரியல்ல

   ________________________________________

8. தகவலாளர் யார் என்பது ஆய்வுக்கு உட்படுபவருக்குத் தெரியுமா (உங்கள் அனுமானத்தில்)? ☐ சரி ☐ சரியல்ல

   ________________________________________

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள்

**ஆய்வுக்கு உட்படுபவருக்கான தீர்மானித்தல் மற்றும் பிரச்சினைத் தீர்த்தல் கேள்விகள்:**

குறிப்புரைகள்: தொடக்கத்தில், ஆய்வுக்கு உட்படுபவர் அளித்த பதில்கள் தரம் 0 விற்குத் தகுதி இல்லாமலிருந்தால், பிரச்சினையை ஆய்வுக்கு உட்படுபவர் எவ்வளவு சிறப்பாகப் புரிந்து கொள்கிறார் என்பதை இனம்காண அதை மீண்டும் கேட்கவும். மிகநெருக்கமான பதிலை வட்டமிடவும்.

**ஒற்றுமைகள்:**

உதாரணம்: "பேனாவுக்கும் பென்சிலுக்கும் உள்ள ஒற்றுமை என்ன? (எழுது கருவிகள்)
பின்வரும் பொருள்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமை என்ன?" ஆய்வுக்கு உட்படுபவரின் பதில்

1. வெங்காயம் …கத்திரிக்கை ______________________________
   (0 = காய்கறிகள்)
   (1 = உண்ணக்கூடிய உணவுகள், உயிருள்ளவை, சமைக்கக்கூடியவை, இதர)
   (2 = உரிய பதில் இல்லை; வேற்றுமைகள்; அவற்றை வாங்கவும்)

2. மேஜை …… புத்தக அலமாரி ______________________________
   (0 = மேஜை/நாற்காலி போன்றவை, அலுவலகத்திற்கான மேஜை/நாற்காலி போன்றவை; இரண்டிலும் புத்தகம் வைக்கலாம்)
   (1 = மரத்தால் ஆனது, காலுள்ளது)
   (2 = உரிய பதில் இல்லை, வேற்றுமைகள்)

**வேற்றுமைகள்:**

உதாரணம்: "சீனிக்கும் புளிக்கும் இடையில் என்ன வேறுபாடு? (இனிப்பு x புளிப்பு)

பின்வருபவைகளுக்கிடையிலான வேற்றுமைகள் என்ன?"

3. பொய்……பிழை ______________________________
   (0 = ஒன்று தெரிந்தே செய்வது, ஒன்று தெரியாமல் செய்வது)
   (1 = ஒன்று மோசம், ஒன்று நல்லது – அல்லது ஒன்றை மட்டுமே விளக்குகிறார்)
   (2 = வேறு ஏதேனும், ஒற்றுமைகள்)

4. ஆறு……கால்வாய் ______________________________
   (0 = இயற்கையானது - செயற்கையானது)
   (2 = வேறு ஏதேனும்)

**கணக்கிடல்:**

5. ஒரு ரிங்கிட்டில் எத்தனை 10 காசுகள் உள்ளது? ☐ சரி ☐ சரியல்ல

6. 6.80 ரிங்கிட்டில் எத்தனை 20 காசுகள் உள்ளது? ☐ சரி ☐ சரியல்ல

7. 20 - ல் இருந்து 3 ஐ கழியுங்கள். அதேபோல் தொடர்ந்து 3 - ஐ கழித்துக் கொண்டே இறுதிவரை செல்லுங்கள். ☐ சரி ☐ சரியல்ல

**தீர்மானித்தல்:**

8. முன்பின் தெரியாத நகரத்திற்கு வந்தால், நீங்கள் பார்க்க விரும்பும் உங்கள் நண்பரை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?

   (0 = தொலைபேசி டைரக்டரியில் பார்த்தல் அல்லது பொது நண்பர் ஒருவரை அழைத்தல்)
   (1 = போலீஸில் விசாரித்தல், தொலைபேசி ஒப்பிரேட்ட்ரை விசாரித்தல்(பெரும்பாலான நேரம் இங்கு முகவரி கிடைப்பதில்லை)
   (2 =தெளிவான பதில் இல்லை)

9. தனக்கு ஏற்பட்டுள்ள ஊனம் மற்றும் சமூக நிலையைப் பற்றியும், தான் இந்தப் பரிசோதனையில் ஏன் கலந்து கொண்டிருக்கிறார் என்பது பற்றியும் ஆய்வுக்கு உட்படுபவரின் மதிப்பீடு (இது முன்பே கேட்கப்பட்டிருந்தாலும் உங்கள் சொந்த கருத்தை இங்கே தெரிவிக்கவும்):

   ☐ நன்றாகத் தெரிந்திருக்கிறார் ☐ ஓரளவு தெரிந்திருக்கிறார் ☐ சிறிதளவே தெரிந்திருக்கிறார்

# மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீட்டுத் தாள் (CDR)

| மூளைக் கோளாறுக்கான சிகிச்சைமுறை மதிப்பீடு **(CDR):** | **0** | **0.5** | **1** | **2** | **3** |
|---|---|---|---|---|---|

| | பாதிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | எதுவுமில்லை<br>0 | கேள்விக்குரியது<br>0.5 | லேசாக<br>1 | மிதமாக<br>2 | கடுமையாக<br>3 |
| ஞாபக சக்தி | ஞாபக சக்தி இழப்பு இல்லை அல்லது எப்போதாவது சிறிதளவு மறதி ஏற்படுகிறது | தொடர்ந்து சற்று மறதி; சம்பவங்களை ஓரளவு ஞாபகப்படுத்துதல்; "பரவாயில்லை" ரக மறதி | ஓரளவுக்கு ஞாபக சக்தி இழப்பு; அண்மைச் சம்பவங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில்; அன்றாட செயல்பாடுகளில் குறைபாடு குறுக்கிடுகிறது | கடுமையான ஞாபக சக்தி இழப்பு; அதிகம் பயின்றவை மட்டுமே ஞாபகத்தில் உள்ளது; புதிய தகவல்கள் சீக்கிரம் மறந்துவிடுகிறது. | கடுமையான ஞாபக சக்தி இழப்பு; இங்கும் அங்கும் ஓரளவு ஞாபகத்தில் உள்ளன. |
| காலம் மற்றும் இடத்தைத் தீர்மானிக்கும் திறமை | காலம் மற்றும் இடத்தைத் தீர்மானிக்கும் திறமையில் முழுமை | நேரத்தைத் தொடர்பு படுத்துவதில் இருக்கும் ஓரளவு சிரமம் தவிர, காலம் மற்றும் இடத்தைத் தீர்மானிக்கும் திறமையில் முழுமை | நேரத்தைத் தொடர்பு படுத்துவதில் ஓரளவு சிரமம்; பரிசோதனைக்கான இடத்தைக் கண்டுபிடிப்பதில் தீர்மானிக்கும் திறமை; வேறு இடங்களில் இடத்தைத் தீர்மானிக்கும் திறமை இல்லாமல் இருக்கலாம். | நேரத்தைத் தொடர்பு படுத்துவதில் கடுமையான சிரமம்; வழக்கமாக நேரத்தைத் தீர்மானிக்க முடிவதில்லை, அடிக்கடி இடத்தைத் தீர்மானிக்க முடிவதில்லை | இது அவருக்கு மட்டுமே பொருந்தும் |
| தீர்மானித்தலும் பிரச்சினை தீர்த்தலும் | அன்றாட பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதுடன் வியாபார மற்றும் நிதி விவகாரங்களை சிறப்பாகக் கையாளுகிறார்; கடந்த காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, முடிவெடுக்கும் திறமை நன்றாக உள்ளது. | பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை அறிவதிலும் ஓரளவு பாதிப்பு இருக்கிறது. | பிரச்சினைகளைக் கையாள்வதிலும், ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை அறிவதிலும் ஓரளவு சிரமம் இருக்கிறது. சமூகத் தொடர்பான தீர்மானித்தல்கள் அப்படியே இருக்கின்றன. | பிரச்சினைகளைக் கையாள்வதிலும், ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை அறிதலிலும் கடுமையான சிரமம் இருக்கிறது; சமூகத் தொடர்பான தீர்மானித்தல்களில் பாதிப்பு | தீர்மானிக்கவோ அல்லது பிரச்சினைகளைத் தீர்க்கவோ முடிவதில்லை |
| சமுதாய ஈடுபாடுகள் | வேலை, ஷாப்பிங், தொண்டு மற்றும் சமூகக் குழுக்களில் வழக்கமான அளவில் தனியான முறையில் செயல்பாடுகள் | இந்த செயல்பாடுகளில் சற்று பாதிப்பு | சிலவற்றில் இன்னும் ஈடுபட முடிந்தாலும், இந்த நடவடிக்கைகளில் தனியாக ஈடுபடமுடியவில்லை; தற்செயலாகப் பார்த்தால் சாதாரணமாகவே தெரிகிறது. | வீட்டுக்கு வெளியே தாமாகவே செயல்படுவதாக பாவனை செய்வதில்லை | |
| | | | | வீட்டுக்கு வெளியே நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்லலாம் என்று எண்ணத்தக்க தோற்றம் | வீட்டுக்கு வெளியே நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்ல முடியாத அளவு நலமின்மை என்று எண்ணத்தக்க தோற்றம் |
| வீடும் பொழுதுபோக்கு களும் | வீட்டு வாழ்க்கை, பொழுதுபோக்கு, அறிவார்ந்த செயல்பாடுகள் ஆகியவை நன்கு பராமரிக்கப்படுகின்றன | வீட்டு வாழ்க்கை, பொழுதுபோக்கு, அறிவார்ந்த செயல்பாடுகள் ஆகியவற்றில் ஓரளவு பாதிப்பு உள்ளது | வீட்டுச் செயல்பாடுகளில் லேசான ஆனால் நிச்சயமான குறைபாடு உள்ளது; கஷ்டமான வேலைகள் கைவிடப்பட்டன; மிகவும் சிக்கலான பொழுதுபோக்குகள் மற்றும் ஆர்வச் செயல்கள் கைவிடப்பட்டன | சாதாரண வேலைகள் மட்டும் தொடரப்படுகிறது; மிகவும் வரையறுக்கப்பட்ட ஆர்வச்செயல்கள்; பராமரிப்பு மோசம் | வீட்டில் எந்த ஒரு செயல்பாட்டையும் செய்வதற்கான குறிப்பிடத்தக்க திறமை இல்லை |
| சுய பராமரிப்பு | சுய பராமரிப்பை முழுதாக செய்யமுடியும் | | தூண்டப்பட வேண்டியிருக்கிறது | ஆடையணிதல், தூய்மை பேணல் மற்றும் சொந்த உடமைகளை வைத்துக் கொள்ள உதவி தேவைப்படுகிறது | சொந்த கவனிப்புக்கு அதிக உதவி தேவைப்படுகிறது; அடிக்கடி சிறுநீர் மற்றும் மலத்தின் மேல் கட்டுப்பாடின்றி இருப்பது |

சிந்திக்கும் திறமை இழப்பால் முந்தைய வழக்கமான நிலையிலிருந்து குறைந்திருந்தால் மட்டுமே மதிப்பெண் அளிக்கவும், பிற காரணங்களால் பாதிப்பு இருந்தால் அல்ல.